**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், முதுகுளத்தூர்.**

**O.S.No.98/2012**

2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 02 நாள் வாதி/பிரதிவாதி தரப்பில் சாட்சி வாக்குமூலம் 1983ம் ஆண்டு 1வது விதியின் ஏற்பாட்டின்படி உதவியாளரால் பிரமாணம் செய்யப்படுகிறது. உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.கோவிந்தன் | தாலுகா | : |
| த/ பெயர் | : | கிராமம் | : |
| க/ பெயர் | : | | |
| வயது | : | தொழில் | : |

**<u>பி.வா.சா.4</u>**

நாள் : 02.02.2026

நேரம் : 12.20.P M

**<u>முதல் விசாரணை</u>**

நான் நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணைக்கு இணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 4 வது பக்கம் மற்றும் கடைசி பக்கத்தில் உள்ள 1வது கையொப்பம் எனது கையொப்பம் தான். பி.வா.சா.ஆ.1ல் உள்ள 2 சொத்துகள் குறிப்பிடப்பட்டிருந்தது என்று நினைக்கிறேன். பி.வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்டு சுமார் 15 வருடங்களுக்கு மேலிருக்கும்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1)சாட்சி சம்மனில் உள்ள விசயங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நீதிமன்றத்திலிருந்து சம்மன் வருவதற்கு முன்னரோ அல்லது அதற்கு பின்னரோ வழக்கின் தரப்பினர்கள் என்னை வந்து சந்தித்தாரார்களா என்றால் இல்லை. நீதிமன்றத்திலிருந்து ஆணை வந்த பின்னர் நான் அவர்களை போய் பார்த்தேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் இட எத்தனை நாட்களுக்கு முன்னர் என்னை அழைத்தார்கள் என்றால் அன்று தான் அழைத்தார்கள்.

1ம் வாதியின் கணவர் தான் என்னை அழைத்தார்கள். பி.வா.சா.ஆ–1 ல் கண்ட சொத்திற்கும், 1ம் வாதியின் கணவருக்கோ, மருமகனுக்கோ எந்த பாத்தியமும் இல்லை என்றால் சரிதான். பாகம் பிரிக்காத நிலையில் 1ம் வாதி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதி கொடுத்தது போல் 1ம் பிரதிவாதி மற்றும் 12ம் பிரதிவாதி ஆகியோர் சேர்ந்து வேறு நபர்களை வைத்து உற்பத்தி செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. பாகம் பிரித்ததாக கூறியதால் தான் கையொப்பம் இட்டேன். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதும் போது சென்றேனா அல்லது எழுதி முடித்த பின்னர் சாட்சி கையொப்பம் இட சென்றேனா என்றால் எழுதி கொண்டிருக்கும் போது சென்றேன். பி.வா.சா.ஆ.1 ஆவணம் எந்த ஆவணத்தின் அடிப்படையில் ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை.

2)1ம் பிரதிவாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் மைத்துனர். 1ம் வாதி எனக்கு அண்ணியாவார். வாதிகளுக்கும், எனக்கும் முன்பகை உள்ளதால் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக வாதியை மோசடி செய்வதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**12 முதல் 14, 16 முதல் 20 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்குவிசாரணை இல்லை என்று கூறியதன் அடிப்படையில் குறுக்குவிசாரணை இல்லை என்று முடிக்கப்பெற்றது .**

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.30 PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2026.02.02 17:42:12 +0530